RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI:10.34256/irjt22316

OPEN ACCESS

# திருக்குறள் கூறும் இல்லாளின் மாண்புகள்

விக்னேஸ்வரி [அ, *]

[அ] தமிழ்த்துறை, நேரு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோவை-641105, தமிழ்நாடு, இந்தியா

# Wife Honors Says Thirukkural

P. Vigneshwari [a, *]

[a] Department of Tamil, Nehru Arts and Science College, Coimbatore-641105, Tamil Nadu, India

* Corresponding Author:
vigneshwari.cbe@gmail.com

Received: 16-02-2022
Revised: 18-05-2022
Accepted: 22-05-2022
Published: 05-07-2022

## ABSTRACT

According to the adage 'a good family is a university', a family is one in which husband, wife and people all live in harmony with each other. Such a household is the best home life. It is enough to have love and affection for home life. Money, position, etc. are not required, and love and charity will give you the quality of life you need and the quality you will possess through virtue. The purpose of life is to make man's life better than home. Effectively run the household with the fiber of trust. The only happiness is in understanding and living. The wife should be considered his life. Education is the lifeblood of human knowledge. Only if this education is not hampered will a good society be formed and all the members of the society should come forward to make education available to all without destroying it. In today's world of automation can be a daunting task. Husbands and wives who are engaged in the bond of marriage, the happy life of love over time disappears and the mental breakdown occurs. The reason is that despite making money in the social context, both of them are rushing to the world with no time to talk and with the world they too are rushing to make money for the need of the future as our present becomes a forgotten machine. This situation must change. Husbands and wives need to talk to each other as friends. In such a home life that gives sweetness in the home life, the homemaker fulfills the domestic duties and the benefits he achieves if he acts with a sense of duty beautifully.

**Keywords:** Thirukkural, Sangam Litrature, Family Life, Human Civilization.

## முன்னுரை

கல் தோன்றி, மண் தோன்றா காலத்தே முன்தோன்றிய மூத்தமொழி இம்மொழிக்கு சிறப்பு சேர்க்கும் வண்ணம் இலக்கியங்களில் முதலிடம் பெறுவது திருக்குறள். வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிகாட்டுகின்ற காலத்தால் முற்பட்டதும், நீதி இலக்கியங்கள் வரிசையில் எண்ணப்படுவதுமான உலக பொதுமறையாம் திருக்குறளில் ஆணும் பெண்ணும் மணம் புரிந்து கற்பு நெறிடன் இல்வாழ்க்கை வாழவேண்டும். இல்வாழ்க்கையின் பயன், இல்வாழ்வின் சிறப்பு, இல்லாளின் மாண்புகள், கணவன் மனைவியின் சிறப்பு, குறித்த செய்திகளை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

## இல்லறம்

“நல்லதோர் குடும்பம் பல்கலைக் கழகம்” என்ற முதுமொழிக்கு ஏற்ப குடும்பம் என்றால் கணவன், மனைவி, மக்கள் என அனைவரும் ஒருவரை ஒருவர் அனுசரித்து வாழ்வதாகும்.

இல்வாழ்க்கையில் உள்ளவர்கள் அன்பு, ஒப்புரவு, ஈகை, புகழ், வாழ்க்கைத்துணைநலம், மக்கட்பேறு, விருந்தோம்பல், செய்நன்றியறிதல், இனியவை கூறல், நடுவுநிலைமை, அன்புடைமை, ஒழுக்கமுடைமை, பிறனில் சொல்லாமை, பொறையுடைமை, அழுக்காறாமை, வெஃகாமை, தீவினையச்சம், பயனிலை சொல்லாமை, புறங்கூறாமை போன்ற கருத்துக்களைப் பின்பற்றி நடந்தால் வாழ்க்கை சர்க்கரைப் பந்தலில் தேன் மாரி பொழிந்தது போன்று இனிக்கும்.

## இல்லாளின் மாண்புகள்

இல்லறத்தில் இல்லாள் என்பவள் அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தருபவள். இசைக்கு மயங்காத உயிர்கள் இல்லை என்பது போல அவள் அன்பிற்கு மயங்காத உறவுகள் இல்லை என்றே கூறலாம். அன்பு, அமைதி, இரக்கம், ஈகை, பொறுமை, விவேகம், சுயநலமின்மை, விட்டுக்கொடுத்தல் போன்ற அணிகலன்களை அனிந்து புன்னகையுடன் இருந்தாலே மகாலட்சுமி தங்கியிருப்பாள். வீட்டை ஆளக்கூடிய மாட்சிமை பொருந்திய குணநலன்களை உடைள பெண் தன்னுடைய உடல் நலத்தையும், மன நலத்தையும் காத்துக்கொண்டு தன் கணவனையும் காத்து, கணவனின் குடும்பத்தையும் பேணிச் சோர்வில்லாமல் இருக்கக் கூடியவள் பெண் என்பதனை,

"தற்காத்து தற்கொண்டாற் பேணித் தகைசான்ற

சொற்காத்துச் சோர்விலாள் பெண்"

என்ற குறள் எடுத்துரைக்கின்றது (Parimelalhagar, 2002). கணவன் மீது கொண்ட அன்பின் ஆழத்தை இந்தப் பிறவியில் மட்டுமல்லாமல் ஏழேழ் பிறவிக்கும் அவனே கணவனாகவும் உற்ற துணைவனாகவும் வரவேண்டுமென விரும்புகிறாள் என்பதனை,

"எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும்

உன் தன்னோடு உற்றோமே ஆவோம"

என்ற ஆண்டாளின் வரிகளும் (Vasan, 2009),

"இம்மை மாறிய மறுமை யாகினும்

நீயா கியரென் கணவனை

யானா கியர் நின் நெஞ்சு நேர்பவளே"

பாடல் வரிகளும் இல்லறத்தில் இல்லாளின் மாண்பின்சிறப்பையும் அன்பையும் வெளிப்படுத்துகின்றது (Swaminatha Iyer, 1962). இவ்வாறு கணவனே கண்கண்ட தெய்வமாகப் போற்றி கணவனுக்குச் செய்யவேண்டிய கடமைகயைச் செய்து வரும் பெண்கள் பெய் என்றால் மாரி கூட மறுக்காமல் மழை பொழியும் என்று கற்பின் சிறப்பை,

"தெய்வம் தொழாள் தொழுநன் தொழதொழுவாள்

பெய்யெனப் பெய்யும் மழை"

என்ற குறட்பாவில் பதிவு செய்துள்ளார் (Parimelalhagar, 2002). இல்லறத்தில் இல்லாள் தன் கடமையைச் செய்து மனையறத்தைக் காக்கும் மாண்பினை உடையவள் என்று அழகாகக் கூறியுள்ளார்.

## இல்வாழ்வின் சிறப்பு

இல்வாழ்க்கையை சிறந்த முறையில் வாழ்பவன் தன் ஐம்புலன்களை அடக்கி வாழ்வானால் துறவிகளுக்கும் தலைவனாக விளங்கலாம் என்பதை,

"இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்

முயல்வாருள் எல்லாம்தலை"

என்கிறார் (Parimelalhagar, 2002). இல்வாழ்க்கையைத் திறம்பட செயல்படுத்த முடியாதவர்கள் அறத்தைத் துறவு வாழ்க்கையில் செய்ய முடியாது என்பதை,

"அறத்தாற்றின் இல்வாழ்க்கை அற்றின் புறத்தாற்றில்

போஓய்ப் பெறுவ எவன்"

என்ற குறட்பா வாயிலாக வலியுறுத்தியுள்ளார் (Parimelalhagar, 2002).

இல்லறக் கடைமைகளை தூய்மையுடனும், அறத்தூய்மையுடனும் கடைபிடிப்பவர்கள் வானுலகில் வாழும் தெய்வத்திற்கு சமமானவர்கள் என்பதை,

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்

தெய்வத்துள் வைக்கப் படும்" (Parimelalhagar, 2002)

எனவும்,

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை

பண்பும் பயனும் அது"

என்று மிகத்தெளிவாக கூறியுள்ளார் (Parimelalhagar, 2002). இக்கருத்தையே குறுந்தொகைப்பாடலும்,

"யாயும் ஞாயும் யார் ஆகியரோ?

எந்தையும் நுந்தையும் எம்முறை கேளீர் ?

யானும் நீயும் எவ்வழிஅறிதும்?;

செம்புலப்பெயல் நீர் போல

அன்புடையார் நெஞ்சம் தாம் கலந்தனவே"

செம்மண் பெய்த நிலத்தில் பெய்த நீரானது மண்ணுடன் கலந்த பின் அதைப் பிரிப்பது என்பது இயலாத செயல். அதுபோல தலைவனும் தலைவியும் தம்முள் மாறுபடாத அன்பு கொண்டு ஒன்றிணைந்து வாழும் வாழ்க்கையாகிய இல்லறமே நல்லறமாகும் என்பதை இப்பாடலடிகள் தெளிவாக சுட்டுகின்றது (Swaminatha Iyer, 1962). இப்பாடலடிகள் தலைவன், தலைவியிடையே உள்ள அன்பினை கூறுவதை உணரமுடிகிறது.

## இல்வாழ்க்கையின் பயன்

இல்லற வாழ்விற்கு அன்பும் அறனும் இருந்தாலே போதும்.பணம், பதவி போன்றவை தேவையில்லை என்றும், அன்பும், அறனும் வாழ்க்கைக்குத் தேவையான குணத்தையும், குணத்தின் வாயிலாகப் பண்பையும் தரும். இதில் இல்வாழ்க்கை வாழும் முறைப் பற்றி,

"அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அதும்

பிறன்பழிப்பது இல்லாயின் நன்று"

மேற்குறிப்பிட்ட குறட்பாக்களில் வாழ்வின் உயர்ந்த பண்பாகக் கருதப்படும் அறம் என்பது இல்வாழ்க்கையேயாகும் (Parimelalhagar, 2002). இந்த இல்வாழ்க்கை பிறர் பழித்து பேசுவதற்கு இடம் கொடாமல் அமைந்தால் அதுவே சிறப்பு

கணவன், மனைவியை பிறர் முன்னிலையில் கேவலமாக நடத்தும் கணவனும், கணவனின் குறிப்பறியாமல் வாழும் மனைவியும் ,நடத்தும் இல்லறம் சிறக்காது. கணவனும் மனைவியும் ஈருயிர் ஓர் உடல் போல் வாழவேண்டும். நம்பிக்கை என்ற நார் கொண்டு இல்லறத்தை திறம்பட நடத்தவேண்டும். புரிந்து வாழ்வதில் தான் மனமகிழ்ச்சியே இருக்கிறது. மனைவியை தன் உயிராகக்

கருதவேண்டும். இடது கண்ணில் வலி வந்தால் வலது கண்ணும் சேர்ந்து கலங்குவது போல மனைவியின் சுக துக்கங்களில் பங்கெடுக்கும் தலைவனே மிகச்சிறந்த இல்லாளன் ஆவான்.

## கணவன் மனைவியின் சிறப்பு

கணவனும் மனைவியும் இல்லறத்தில் சேர்ந்து வாழ்வதன் இன்றியமையாமையையும் சிறப்பையும் விளக்கும் வகையில்,

"மனைத்தக்க மாண்புடையவள் ஆகித்தற் கொண்டான்

வளத்தக்காள் வாழ்க்கைத் துணை"

மனைவியானவள் தன் கணவனின் வருமானத்திற்கு ஏற்ப வாழ்க்கையை அமைப்பவளாகத் திகழ வேண்டும் (Parimelalhagar, 2002). இன்றைய காலகட்டத்தில் பல குடும்பங்களில் வரவுக்கு மீறிய செலவுகள் செய்வதால் சண்டைச் சச்சரவுகள் ஏற்படுகின்றன. கணவனின் நிலையை மனைவியும், மனைவியின் தேவைகளை கணவனும் அறிந்து செயல்பட்டால் குடும்பத்தில் அமைதி நிலவும்.

## முடிவுரை

மனிதனின் வாழ்க்கை இல்லறம் என்ற நல்லறத்தால் மட்டுமே முழுமையடைகிறது அத்தகைய இல்லற வாழ்வில் இல்லாளர் ஆற்றும் இல்லறக் கடமைகளையும் கடமை உணர்வுடன் செயல்பட்டால் அவர்தம் அடையும் மாண்புகளையும் சிறப்புக்களையும் அழகாக கூறியுள்ளார். மனிதன் தன் வாழ்வில் அறம் பொருள் இன்பம் ஆகியவற்றை கடைப் பிடித்து ஒழுகினால் வாழ்கை சிறப்பாக அமையும். இல்லாள் தன் ஆண் பிள்ளைக்கு பெண்மையின் நற்குணங்களையம் எடுத்துக்கூறும் முக்கியப் பொறுப்பினை இல்லாள் கடைப்பிடித்தால் கொலை, கொள்ளை, வன்கொடுமை போன்ற குற்றங்களிலிருந்து சமுகம் நலன்பெறும் என்கிறார்.

## References

Parimelalhagar, (2002) Thirukural, Saradha Pathippagam, Chennai, India.

Swaminatha Iyer, U, Ve., (2009) Kurunthogai moolamum uraiyum, U, V, SA., Library, Chennai, India.

Vasan, (2009) Thiruppavai Thiruvembavai, Vasan Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License